9th November 1961]

SRI S. M. ANNAMALAI : ஸார், விவசாயக் கருவிகள் என்றால் என்னென்ன பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன? விஞ்ஞான முறையிலும் நவீன முறையிலும் தயாரிக்கப்படுகின்ற கருவிகள் மட்டும்தானு? அல்லது பழைய கருவிகளையே தயாரிக்கலாம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறதா? எந்த அடிப்படையில் இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழைய கருவிகள், புதிய கருவிகள் என்று ஒன்றும் பிரிக்கப்படவில்லை. பழைய கருவிகளையே புதுப்பித்து தயாரிக்கலாம். விஞ்ஞான முறையிலும் மாற்றி அமைக்கலாம். பொதுவாக நம்மிடையே மாடுகள் இழுக்கின்ற கருவிகள் இருக்கின்றன. கையால் உபயோகப்படுத்துகின்ற கருவிகளும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நல்ல முறையில் தயாரிப்பவர்களுக்கு பரிசு கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலும் இதுபோன்ற விவசாயக் கருவிகளை கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்யவேண்டும் என்று மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா? அப்படியென்றால் அதன் மீது நம்முடைய சர்க்காரின் அபிப்பிராயம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி இதிலிருந்து எழவில்லை. இதைப்பற்றி மேல் விவரங்கள் அறிய வேண்டுமானால் தனியாக கேள்வி போடவேண்டும். இதில் மத்திய சர்க்காருக்கோ அல்லது ராஜ்ய சர்க்காருக்கோ எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அதோடு இதில் பஞ்சாயத்து யூனியன்களும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் இதில் வேண்டிய கவனம் செலுத்தி வருகிறது.

Agricultural implements (production)

* 1931 *Q.*—**SRI A. R. MARIMUTHU :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் விவசாய உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(இ) அங்கு என்ன என்ன கருவிகள் செய்யப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) A statement [a] is placed on the table of the House.

SRI A. R. MARIMUTHU : நவீன விவசாயக் கருவிகள் இப்போது விவசாயிகளுக்கு மிகவும் தேவையாக இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒவ்வொரு சென்டர் அமைத்து உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு தாலுகாவுக்கும் அமைப்பது என்பது சாத்தியமில்லை. கூடியமட்டும் இது விரிவாக்கப்படும்.

---

a Printed as Appendix IV on pages 114–115 infra.

Sri A. R. MARIMUTHU : பொதுவாக தயாரிக்கப்படும் விவசாயக் கருவிகள் மிகவும் தரம் குறைந்தவைகளாக இருக்கின்றன. சமீபத்தில் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலம் கொடுத்த விவசாயக் கருவிகளை சரியானபடி உபயோகப்படுத்த முடியவில்லை. ஆகவே, இந்தக் கருவிகளை நல்ல முறையில் தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதுபற்றி அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடு கருவிகளை மட்டும் குறை சொல்லுவதில் பிரயோசனம் இல்லை, அதை உபயோகிப்பவர்கள் மீதும் தவறுகள் இருக்கலாம்.

Supply of fertilizers (Tiruchirappalli district)

* 1932 *Q.*—Sri T. KARIA GOUNDER (on behalf of Sri G. ANNAMALAI MUTHURAJA) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லாவிற்கு நடைமுறை விவசாய ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட உர மூட்டைகள் எவ்வளவு?

(இ) அது எந்த முறையில் வினியோகிக்கப்படும்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The total quantity of fertilizers fixed for Tiruchirappalli district for 1961-62 is 13,300 tonnes in terms of Ammonium Sulphate (one metric tonne of Ammonium Sulphate is sent in 10 bags of 100 kilograms each. In respect of other fertilizers one metric tonne is sent in 20 bags of 50 kilograms each).

(*b*) The retail distribution of these fertilisers to the ryots is done solely through the primary co-operative societies.

Sri A. GOVINDASAMY : திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூரில் ரசாயன உரத்தோடு சாப்பாட்டுக்கான உப்பையும் சேர்த்து விற்பனை செய்ததாக தகவல் இருந்ததே, அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இதில் யார் யாரெல்லாம் தண்டிக்கப்பட்டார்கள்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது பழைய விஷயம். வேறு சில இடங்களிலும் இம்மாதிரி நடந்திருக்கின்றன. முக்கியமாக தென்னாற்காடு மாவட்டத்தில் மிகவும் அதிகமாக நடப்பதாக தகவல். இதைக் கண்டுபிடித்து கேஸ் போடப்படுகிறது. அதை கோர்ட்டுக்கு அனுப்புகிறார்கள். கோர்ட்டில்தான் தகுந்தபடி தண்டனை கொடுக்கப்படும்.

Sri A. GOVINDASAMY : தென்னாற்காடு ஜில்லாவில்தான் அதிகமாக நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள். அதை ஏன் போலீஸ் நிர்வாகம் சரியாக கண்டு பிடிக்கவில்லை?